1001

ஜயராம

# சற்குருஸ்தவம்.

வேலுபிள்ளை.


Q2:417
N14
17882

உ

கணபதி துணை.

# ஜயராம சற்குரு ஸ்தவம்.

இது

கிளாம்பாக்கம் - கர்ணம்

ம-ா-ா-ஸ்ரீ வேலுபிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை கிராமம்-மணிய முனிசிப்

ம-ா-ா-ஸ்ரீ சாமிமுதலியா ரவர்களால்

சென்னை, கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பட்டு,

மேலைத்தொண்டையார் 2-வது வருஷ சாதுசங்க

மகோற்சவத்தில் விநியோகிக்கப்பட்டது.

1914.

MADRAS

## சாற்றுக்கவி.

சென்னை - ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர் - ஸ்ரீமத். கோ-வடிவேலு செட்டியார்
அவர்களியற்றிய

**அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.**

அருணிறைந்த ஜயராம சற்குருஸ்த வந்தன்னை யன்பு மிக்குத், தெருணிறைந்த வகத்தோடு வேலு பிள்ளை யெனுங்கவிஞன் செவ்வி தாக, மருணிறைந்த மனத்தினரு மாண்புற்று நற்கதியை மருவு மாறு, பொருணிறைந்த தாவியற்றிக் கலைமகளும் புகழநலம் பொருந்தி னனல்.

---

மேற்படி செட்டியார் அவர்கள்
மாணவர்களு ளொருவராகிய
ம-ள-ள-ஸ்ரீ நரசிங்கபுரம், குழந்தைவேலு ஆச்சாரி
யவர்கள் இயற்றிய.

**அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.**

சீர்மேவு கிளாம்பாக்கப் பதிமேவுங் கருணீகர்
செழிக்க வந்தோன்
நார்மேவுஞ் சத்வகுண சீலரடி தனையென்று
நவிலுஞ் சீரான்
ஏர்மேவும் ஜயராம சற்குருஸ்த வந்தன்னை
யியம்பி யேய்ந்தான்
பார்மேவப் பிறங்குபுகழ் வேற்பிள்ளை யென்னு
மொரு பண்பன் றானே.

கணபதி துணை.

# ஜயராம சற்குரு ஸ்தவம்.

## எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பார்முதலாம் பூதத்தைப் பானுவ முன்னர்ப்
பறக்கின்ற விமமேபோற் பார்த்தாய் போற்றி
கார்முகிலே யேநிகர்த்த கருணை வாய்ந்த
கண்மணியே கண்ணுதலே கனியே போற்றி
யார்வலனே யோர்மொழியாற் றுவித மற்ற
வத்துவித வானந்த மளித்தாய் போற்றி
சார்வான சஞ்சிதத்தை நசிக்கச் செய்யுஞ்
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 1

ஆரியனே யிரண்டற்று நின்றாய் போற்றி
யருளுடைய வாநந்த வரசே போற்றி
நேரியனே புரமூன்றை நேதி செய்து
நித்தியமாம் வாழ்வளித்த நிமலா போற்றி
காரணனே கலைகளெலா மோதி வைத்த
கற்பகமே கற்கண்டே கண்ணே போற்றி
சாரமெலாந் திரண்டுநின்ற சத்தே போற்றி
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 2

வேதத்தின் முடிவான வேந்தே போற்றி
வேட்கையிலா நிட்களங்க விமலா போற்றி
யேதமிலா மெய்ஞ்ஞான வேகா போற்றி
யேகாந்த தானத்தி லுறைந்தாய் போற்றி
மாதவரு மானிடரு மகிழு மாறு
மாசற்ற பதமளித்த மகேசா போற்றி
சாதனமா யாநந்த வறிவை யூட்டும்
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 3

அருளுடைய வடிவான வனகா போற்றி
யன்பார்ந்த வாரியனே யமலா போற்றி
தெருளுடைய சித்தர்கணந் தம்மிற் சேர்ந்து
தெளிவான வகத்தியரின் மரபாய் போற்றி
மருளுடைய மாணவர்க்கு மயலை நீத்த
மரகதமே மாமணியே மன்னு போற்றி
சருளுடைய யாகாதி தன்மை காட்டும்
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 4

உலகொடுயிர் பரமூன்று முயற்கோ டென்ன
வுவமானங் காட்டியரு ளுசிதா போற்றி
பலகலையின் சாரமதைப் புகட்டும் போதப்
பண்ணவனே பராபரனே பதியே போற்றி
சலனமிலா வாழ்வளித்த சதுரா சம்பு
சங்கரனே சங்கையிலாச் சத்தே போற்றி

171813

சலவுலகின் ஞானமதைப் பரவச் செய்யும்
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 5

மூன்றுவித பதத்தினையுந் துச்ச மென்று
முடிவான ஞானபத மளித்தாய் போற்றி
ஆன்றனுடை யான்மாவோ வகில மென்னு
மாசங்கை யில்லாத வசலா போற்றி
தோன்றுகின்ற வுலகதுவா யுழலு மென்னைத்
தோன்றாத தற்பதனாய்ச் செய்தாய் போற்றி
சான்றோர்கள் புகழ்கின்ற சாது வான
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 6

நித்தியமாய் விளங்குகின்ற முத்தா போற்றி
நிர்மலனே நிர்க்குணனே நிதியே போற்றி
வித்தைதனைப் பணியாகக் கொண்டாய் போற்றி
விண்மணியே வினையொழிக்கும் வேதா போற்றி
மித்தையதாய்த் தோற்றுகின்ற திர்ஸ்யம் யாவும்
மீதறிவாய்த் தெரிவித்த மிக்கோய் போற்றி
சத்தையினை யறிவிக்குஞ் சதுரா போற்றி
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 7

நியமமதாய்க் கருமமதிற் பழகு மாறு
நிண்ணயமாய் நியமித்த நித்தா போற்றி
இயமமுத லாங்குணங்க ளிருக்கு மாயி
னின்னல்வரா தெனப்பலகா லிசைத்தாய் போற்றி

800 009
17813



மயலிலா வருணஞானம் வாய்ப்ப தற்கு
மாசற்ற விசாரணையை யளித்தாய் போற்றி
சயனமுறுச் சாத்திரத்தைப் புகட்டு கின்ற
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 8

அணிமாதி யட்டசித்தி போக மியாவு
மநித்தியமாய் முடியுமென்ற வமலா போற்றி
துணிதலிலாத் துவம்பதத்தின் வாச்சி யார்த்தந்
துகளென்று புகன்றவென்றன் துணையே போற்றி
பணிதலிலாத் தற்பதத்தின் லட்சி யார்த்த
பரமான்மா நீயென்று பகர்ந்தாய் போற்றி
தணித்துநின்று சகமதிலே கீர்த்தி பெற்ற
ஜயராம சற்குருவே போற்றி போற்றி. 9

தஞ்சமென்று வணங்கிநின்ற வென்ற னுக்குத்
தத்வமசி வாக்கியத்தைத் தந்தாய் போற்றி
அஞ்ஞான மொழிந்ததுவா யமரு மாறிங்
கசையாத வபரோட்ச மளித்தாய் போற்றி
பஞ்சூகம் வாய்ந்திலகும் பாத மென்னும்
பதுமமல ரனுதினமும் பணிந்தேன் போற்றி
சஞ்சலமே யிலாதமர்ந்த சொரூபா நந்த
ஜயராம சற்குருவே வாழி வாழி. 10

ஜயராமசற்குரு ஸ்தவம் முற்றிற்று,